THE HINDU

PAGE NO: 03 DATE: 18.11.2023

# University kicks off initiative to address sustainability goals

The Hindu Bureau
PUDUCHERRY

Pondicherry University has opened a 'green campus' office to plan and coordinate initiatives to preserve and replenish natural resources on the landscape.

The accelerated accomplishment of Sustainable Development Goals and bringing about a change in the mindset of students, scholars, and stakeholders in relation to climate and environment sustainability are among the goals of the office, a press note from Pondicherry University said.

Gurmeet Singh, Vice-Chancellor of the University, opened the office which will also undertake programmes in alignment with the UGC Quality Mandate to address climate crisis and safeguard the natural resources on the campus and the surrounding environment, the University said. The facility was set up in collaboration with the alumni.

To inculcate environment-conscious behaviour and speedy implementation of the SDGs, M. Nandhivarman, Green Campus coordinator, said the office will operate based on four key principles of environmental justice, fundamental duties outlined by the Constitution, tipping theory (doing the good rather than stopping the bad), and identifying easily achievable actions for the protection and conservation of natural resources, besides fostering a change in attitude among students and stakeholders.

Moreover, the office will provide substantial benefits to the university in various visible ways, such as raising awareness about climate crisis and sustainable development, offering training and capacity building for relevant stakeholders, mentoring students, and establishing real-environment connections, thus making the university's stakeholders more globally prepared.

Tharanikkarasu, Director (Studies), Rajeev Jain, Director (Culture), Clement Sagayaradja Lourdes and Chandhrika, faculty members, officials and students participated in the launch function.

DINAMALAR

PAGE NO: 01 DATE: 18.11.2023

# 78 பணிகளுக்கு எழுத்து தேர்வு 25, 26ம் தேதிகளில் நடக்கிறது

**புதுச்சேரி, நவ. 18–**

புதுச்சேரி பல்கலையில் 78 பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு வரும் 25 மற்றும் 26ம் தேதிகளில் நடக்கின்றது.

பல்கலை விடுத்துள்ள செய்திகுறிப்பு:

புதுச்சேரி பல்கலையில் கடந்த 21.09.2022 மற்றும் 27.09.2023 காலியாக உள்ள பல்வேறு ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

அதில், இளநிலை உதவியாளர், பல்நோக்கு ஊழியர், நேர்முக உதவியாளர், ஹிந்தி மொழிப்பெயர்ப்பாளர், தொழில்நுட்ப உதவியாளர், இயற்பியல் ஆய்வக உதவியாளர், சீனியர் தொழில்நுட்ப உதவியாளர், செவிலியர் அதிகாரி உள்ளிட்ட 78 பணியிடங்களுக்கு வரும் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் எழுத்து தேர்வை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

தேர்வு தேதிக்கு 3 நாட்களுக்கு முன்னதாக ஹால் டிக்கெட், நேரம், தேர்வு மையம், வழிமுறைகள் தெரிவிக்கப்படும். இத்தேர்வு ஓ.எம்.ஆர்.,முறையில் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு தேசிய தேர்வு முகமை இணைய தளத்தை பார்க்கவும்.

DAILY THANTHI

PAGE NO: 11 DATE: 18.11.2023

### பல்கலைக்கழகத்தில்

# காலிப்பணியிடங்களுக்கு 2 நாட்கள் எழுத்துத்தேர்வு

புதுச்சேரி, நவ.18–

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள ஆசிரியர் அல்லாத பல்வேறு பணியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தது. அதில் இளநிலை உதவியாளர், பல்நோக்கு ஊழியர், தனி உதவியாளர், இந்தி மொழி பெயர்ப்பாளர், தொழில்நுட்ப உதவியாளர், ஆய்வக உதவியாளர், முதுநிலை தொழில்நுட்ப உதவியாளர், செவிலியர் அதிகாரி ஆகிய பதவிகளுக்கான எழுத்து தேர்வு வருகிற 25, 26-ந்தேதிகளில் நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வு தேதிக்கு 3 நாட்களுக்கு முன்னதாக அனுமதி அட்டை, நேரம், தேர்வு மையம், வழிமுறைகள் ஆகியவை தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தை தொடர்ந்து பார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

PAGE NO: 16 DATE: 18.11.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# 78 பதவிகளுக்கு எழுத்துத்தேர்வு

## 25, 26 ஆகிய தேதிகளில் நடக்கிறது

புதுச்சேரி, நவ. 18: புதுவை பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய தேர்வு முகமை (NTA) சார்பில் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள 78 பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தேர்வை வரும் 25, 26 ஆகிய தேதிகளில் நடக்கிறது. புதுவை பல்கலைக் கழகத்தில் செப்.21 மற்றும் செப்.27ம் தேதி காலியாக உள்ள பல்வேறு ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது. இதில் இளநிலை உதவியாளர், பல்நோக்கு ஊழியர்கள் (எம்டிஎஸ்), தனி உதவியாளர், இந்தி மொழிப்பெயர்ப்பாளர், செமி புரபெஷனல் அசிஸ்டென்ட், ஆய்வக உதவியாளர் (இயற்பியல்), முதுநிலை தொழில்நுட்ப உதவியாளர் (நெட்வொர்க், கம்ப்யூட்டர்) மற்றும் செவிலிய அதிகாரி ஆகிய பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு வரும் 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. இப்பதவிகளுக்கு 7,074 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தேர்வு தேதிக்கு 3 நாட்களுக்கு முன்னதாக அனுமதி அட்டை (ஹால்-டிக்கெட்), நேரம், தேர்வுமையம், வழிமுறைகள் ஆகியவை தெரிவிக்கப்படும். தேசிய தேர்வு முகமை இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தேர்வு ஓஎம்ஆர் முறையில், புதுச்சேரி மாநிலத்துக்கு உட்பட்ட பகுதிகளிலேயே தேர்வு நடத்தப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMANI

PAGE NO: 04 DATE: 18.11.2023

# புதுவை மத்திய பல்கலை.யில் 78 காலி பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு

## நவம்பர் 25, 26-இல் நடைபெறுகிறது

**புதுச்சேரி, நவ.17:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் உள்ளிட்ட 78 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு வரும் 25, 26-ஆம்தேதிகளில்(சனி,ஞாயிறு) நடைபெற உள்ளது.

இதுகுறித்து, பல்கலைக்கழகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதில், இளநிலை உதவியாளர், பல்நோக்குப் பணியாளர்கள், தனி உதவியாளர், இந்தி மொழி பெயர்ப்பாளர், பகுதி நேர உதவியாளர் உள்ளிட்ட பணிகள் அடங்கும்.

இந்தப் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு வரும் 25, 26-ஆம் (சனி, ஞாயிறு) தேதிகளில் நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வுக்கு 3 நாள்களுக்கு முன்னதாக தேர்வறை அனுமதி அட்டை மற்றும் தேர்வுக்கான நேரம், தேர்வு மையம், வழிமுறைகள் ஆகியவை குறித்து தெரிவிக்கப்படும்.

இந்தத் தேர்வுக்கு விண்ணப்பித்திருப்பவர்கள், தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் தேர்வு ஓஎம்ஆர் முறையிலும் மற்றும் புதுவை மாநிலத்தின் தேர்வு முறைக்கு உட்பட்டும் நடத்தப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

THE HINDU TAMIL

DATE: 18.11.2023

PAGE NO: 03



### புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில்

# 78 பதவிகளுக்கு நவ.25,26-ல் எழுத்துத்தேர்வு

● புதுச்சேரி

புதுவை மத்திய பல்கலைக்கழகம் 21.09.2022 மற்றும் 27.09.2023 அன்று காலியாக உள்ள பல்வேறு ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தது. இதில் இளநிலை உதவியாளர், பல்நோக்கு பணியாளர், தனி உதவியாளர், ஹிந்தி மொழிபெயர்ப்பாளர், செமி புரோபசனல் உதவியாளர், ஆய்வக உதவியாளர் (இயற்பியல்), முதுநிலை தொழில்நுட்ப உதவியாளர் (கம்ப்யூட்டர் நெட்வொர்க்), நர்சிங் ஆபிசர் ஆகிய 78 பதவிகள் இடம் பெற்றிருந்தன. இப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வு நவ. 25, 26-ம் தேதிகளில் நடக்கிறது என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

தேர்வு தேதிக்கு 3 நாட்களுக்கு முன்னதாக அனுமதி அட்டை, நேரம், தேர்வு மையம், வழிமுறைகள் ஆகியவை தெரிவிக்கப்படும். தேசிய தேர்வு முகமை இணையதளத்தை விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து பார்வையிடுவது அவசியம் என்றும் என்டிஏ தெரிவித்துள்ளது.